வழக்குகள் வாபஸ்: எழுத்துபூர்வ உத்தரவாதம் தராவிட்டால் மீண்டும் போராட்டம்

சிஜேபி எச்சரிக்கை

புது தில்லி, ஜூலை 27: தில்லியில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சிக்கு (சிஜேபி) ஆதரவாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், போராட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்து ஜூலை 28-க்குள் (செவ்வாய்க்கிழமை) மத்திய அரசு எழுத்துபூர்வ உத்தரவாதம் அளிக்காவிட்டால்,மீண்டும்போராட்டத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று கரப்பான்பூச்சி ஜனதா கட்சி எச்சரித்துள்ளது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு குளறுபடிகளுக்கு எதிராக, தில்லி ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நடத்திய தீவிர போராட்டத்தைத் தொடர்ந்து, மத்திய கல்வி அமைச்சர் பதவியை தர்மேந்திர பிரதான் ராஜி நாமா செய்தார். இதையடுத்து கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரின் போராட்டம் முடிவுக்கு வந்தது.

இந்நிலையில், புது தில்லியில் அக் கட்சியின் தேசிய செய்தித்தொடர் பாளர் ஆசுதோஷ் ரான்கா, தலைமை செய்தித்தொடர்பாளர் சௌரவ் தாஸ், மூத்த வழக்குரைஞர் கபில் சிபல் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை திங்கள்கிழமை சந்தித்தனர்.

அப்போது ஆசுதோஷ் ரான்கா கூறியதாவது: தில்லி போராட்டத்தின் போது மத்திய அரசுடன் கரப்பான்பூச்சி ஜனதா நடத்திய 3-ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையில், அந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், போராட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் மீது பதிவு செய்த வழக்கை திரும்பப் பெற வேண்டும்; வருங்காலத்தில் அவர்கள் மீது புதிய வழக்கு எதுவும் பதிவு செய்யக் கூடாது; அவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்று கோரினோம். அதை அரசு ஏற்றுக் கொண்டது.

இதுகுறித்து மத்திய அமைச்சர்கள் ஜெ.பி. நட்டா, ஜிதேந்திர சிங் ஆகியோரிடம் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி வரைவு ஒப்பந்தம் சமர்ப்பித்தது. இது தொடர்பாக சட்ட ஆலோசனைகள் நடத்தி ஜூலை 28-க்குள் (செவ்வாய்க்கிழமை) மத்திய அரசு எழுத்துபூர்வ உத்தரவாதம் அளிப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

அந்த உத்தரவாதத்தை அரசு செவ்வாய்க்கிழமைக்குள் அளிக்காவிட்டாலோ, கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களும் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்களும் விடுவிக்கப்படாவிட்டாலோ, மீண்டும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத்துக்கு கரப்பான்பூச்சி ஜனதா கட்சி தள்ளப்படும் என்று தெரிவித்தார்.

தன்னெழுச்சியாக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படக் கூடாது என்று கபில் சிபல் வலியுறுத்தினார்.

முன்னதாக சௌரவ் தாஸ் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'தில்லி போராட்டத்துக்கு ஆதரவாக செயல்பட்ட மாணவர்கள் மற்றும் பிற போராட்டக்காரர்கள் கைது செய்யப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக அஸ்ஸாம், மேற்கு வங்கம், பிகாரில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது மிகுந்த கவலையளிக்கிறது' என்று தெரிவித்தார்.

நீட் தேர்வில் குறைந்த மதிப்பெண்: மகாராஷ்டிரத்தில் மாணவி தற்கொலை

அஹில்யாநகர், ஜூலை 27: மகாராஷ்டிரத்தில் நீட் தேர்வில் குறைந்த மதிப்பெண் எடுத்த காரணத்தால் மன அழுத்தத்தில் இருந்த மாணவி ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

அஹில்யாநகர் மாவட்டம், ஜலால்புர் கிராமத்தைச் சேர்ந்தவர் அங்கிதா சாங்கலே (19). அண்மையில் 12-ஆம் வகுப்பை நிறைவு செய்த அவர், கடந்த ஜூன் மாதம் 21-ஆம் தேதி நடைபெற்ற நீட் மறுதேர்வில் பங்கேற்று தேர்வு எழுதினார். இதற்கான முடிவு ஜூலை மாதம் 16-ஆம் தேதி வெளியாகியிருந்தது. இதில் அங்கிதா குறைவான மதிப்பெண் எடுத்திருந்ததாகவும், இதனால் அவர் மனவேதனையில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், அவர் தனது வீட்டில் கடந்த 25-ஆம் தேதி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மதம் மாறினால் பட்டியலின அந்தஸ்து கிடையாது: மறுஆய்வு மனு தள்ளுபடி

புது தில்லி, ஜூலை 27: மதம் மாறுவோர் பட்டியலின அந்தஸ்தை இழந்துவிடுவர் என்ற தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

ஆந்திரத்தில் பட்டியலினத்தைச் சேர்ந்த ஒருவர், கிறிஸ்தவ மதத்துக்கு மாறி மதபோதகரானார். இந்நிலையில், தனது ஜாதி பெயரை குறிப்பிட்டு தான் இழிவுபடுத்தப்பட்டு மிரட்டப்பட்டதாக காவல் துறையில் அவர் புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் பட்டியலினத்தவர், பழங்குடியினர் வன் கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ், காவல் துறை வழக்குப் பதிவு செய்தது.

எனினும் கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய ஒருவர், சட்டப்படி பட்டியலினத்தவர் அந்தஸ்தை கோர முடியாது என்று கூறி, அந்த வழக்கை ஆந்திர உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக அந்த நபர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், 'பட்டியலினத்தைச் சேர்ந்த ஒருவர் ஹிந்து, சீக்கியம், பௌத்த மதங்களைத் தவிர, பிற மதங்களுக்கு மாறினால், உடனடியாக அவர் பட்டியலின அந்தஸ்தை இழந்துவிடுவார். அதேவேளையில், அந்த நபர் ஹிந்து, சீக்கியம், பௌத்த மதங்களுக்கு மீண்டும் மாறினால், அவர் பட்டியலின அந்தஸ்தை மீண்டும் கோரலாம்' என்று கடந்த மார்ச் மாதம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரி, உச்சநீதிமன்றத்தில் ஆந்திரத்தைச் சேர்ந்த அந்த மதபோதகர் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை அண்மையில் பரிசீலித்த நீதிபதிகள் பிரசாந்த் குமார் மிஸ்ரா, மன்மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, அந்தத் தீர்ப்பில் தலையிட எந்தக் காரணமும் இல்லை என்று தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்தது.

அப்துல் கலாம் நினைவு தினம்: ஓம் பிர்லா, அமித் ஷா புகழஞ்சலி

புது தில்லி, ஜூலை 27: முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் நினைவு தினம் திங்கள்கிழமை (ஜூலை 27) அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி, அவரை நினைவு கூர்ந்து மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர். இந்தியாவின் 'ஏவுகணை மனிதர்' எனப் போற்றப்படுபவரான அப்துல் கலாம் நாட்டின் விண்வெளி மற்றும் ஏவுகணை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு பெரும் பங்காற்றியுள்ளார். கடந்த 2002-ஆம் முதல் 2007 வரை குடியரசுத் தலைவராக இருந்த அவர் 2015, ஜூலை 27-ஆம் தேதி காலமானார்.

இந்நிலையில், அவரது நினைவு தினத்தில் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'ஞானம், ஒழுக்கம், எளிமை மற்றும் தேசச் சேவையை தனது வாழ்வின் அடித்தளமாகக் கொண்டவர் அப்துல் கலாம். தனது அறிவாற்றல், நம்பிக்கை, புத்தாக்கம் மற்றும் தேச கட்டமைப்பு உணர்வுகள் மூலம் நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு அவர் புதிய ஆற்றலை புகுத்தினார். தங்களது இலக்கை அடைய வேண்டும் என்ற இளைஞர்களின் உத்வேகத்தை அவரது தொலைநோக்குச் சிந்தனைகள் பன்மடங்கு உயர்த்தியது' என குறிப்பிட்டார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'இந்திய விண்வெளி மற்றும் ஏவுகணைத் திட்டத்தின் சிற்பியாகத் திகழ்ந்தவர் அப்துல் கலாம். அவரது அறிவியல் ஆற்றல் இந்தியாவை மாபெரும் சக்திவாய்ந்த நாடாக மாற்றும் பயணத்தை வேகப்படுத்தியது. அவரது ஞானம் லட்சக்கணக்கானோரை சிறந்தவர்களாக உருவாக்கியது. அவர் தேசாபிமானிகளுக்கு எப்போதும் சிறந்த முன்னுதாராணமாகவே திகழ்கிறார்' என குறிப்பிட்டார்.

மேலும்,உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி உள்ளிட்ட தலைவர்கள் அப்துல் கலாம் மறைவு தினத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி அப்துல் கலாமின் சாதனைகளை நினைவுகூர்ந்து புகழஞ்சலி செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

சீன துணை அமைச்சருடன் இந்திய வெளியுறவுச் செயலர் சந்திப்பு



பெய்ஜிங், ஜூலை 27: சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச துறையின் துணை அமைச்சர் சுன் ஹயானை இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி திங்கள்கிழமை சந்தித்தார். முன்பு சீனாவுக்கான இந்தியத் தூதராக இருந்த விக்ரம் மிஸ்ரி,அந்நாட்டுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இதுகுறித்து இந்தியத் தூதரகம் வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி துணை அமைச்சர் சுன் ஹயானை திங்கள்கிழமை சந்தித்தார். அப்போது இருநாட்டு மக்களிடையேயான நட்புறவு, கல்வி உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் 14-ஆவது தேசியக் குழுவின் பொதுச் செயலர் ஹான் லியாங்கையும் விக்ரம் மிஸ்ரி சந்தித்தார்' எனத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
மண்டல அலுவலகம், சென்னை

நகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தில் 12 மாதத்தவணை 31.05.2025, 6 மாதத் தவணை 30.11.2025 வரை ஈடு வைக்கப்பட்டு காலவரையரை முடிந்தும் திருப்பப்படாத நகைகள் கெடு முடிவடைந்துள்ளது. மேற்படி நகைக் கடன்களுக்கு உரிய கடன்தாரர்களுக்கு சாதாரண தபால் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற ஏஜென்சி மூலமாக பதிவு தபால் அனுப்பியும் ஈடு வைக்கப்பட்டுள்ள நகைகளை மீட்கவோ அல்லது கடன்களை புதுப்பிக்கவோ இல்லை. அதனால் சம்பந்தப்பட்ட கடன்களுக்கு உரிய ஈடு வைக்கப்பட்ட நகைகளை நிறுவனத்தின் விதிப்படி கீழ்க்கண்ட விவரப்படி ஏலம் விடப்படும். நகை தொடர்பு வைத்தால் இதற்கிருக்கலாம், வெளியூர் சென்றிருந்தாலும் இந்த அறிவிப்பு அவர்கள் வசிக்கும் பொருந்தும். பதிவு தபால் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் மற்றும் முகவரி மாற்றம் செய்தவர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்திற்கு வரும் பாக்கெட்டுகளில் குறிப்பிட்ட பாக்கெட்டுகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கும் மேலும் வேறு தேதியில், வேறு இடத்தில் ஏலத்தை நடத்தவும் நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

ஏலதேதி: 10.08.2026	**நேரம்: காலை 11.00 மணி**	**ஏலம் நடைபெறும் இடம்:** எண். 106, M S-பிளாசா, முதல் தளம், G S T ரோடு, செங்கல்பட்டு 603001	**நகையை மீட்க கடைசி தேதி:** 08.08.2026
நகை கடன் எண். --	தாம்பரம் III கிளை : TAMB3PJ2510310003		
ஏலதேதி: 10.08.2026	**நேரம்: காலை 11.00 மணி**	**ஏலம் நடைபெறும் இடம்:** எண். 73-B , செங்குபுரிரோடை தெரு, காஞ்சிபுரம் - 631502	**நகையை மீட்க கடைசி தேதி:** 08.08.2026
நகை கடன் எண். --	**காஞ்சிபுரம் கிளை:** KNCPMPJ2511070003, KNCPMPJ2511080001; **குன்றத்தூர் கிளை:** KUNTRPJ2511200005, KUNTRPJ2511200006, KUNTRPJ2405040003, KUNTRPJ2511260009; **உத்திரமேரூர் கிளை:** UTMERPJ2511270011, UTMERPJ2511180015		
ஏலதேதி: 10.08.2026	**நேரம்: காலை11.00 மணி**	**ஏலம் நடைபெறும் இடம்:** 1வது தளம், 55-1-A, குன்றில் சர்ச் ரோடு, LIC அலுவலகம் அருகில், மதுராந்தகம் ரோடு, ராஜா பெட்ரோல் பங்க் மாடியில், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் - 603001	**நகையை மீட்க கடைசி தேதி:** 08.08.2026
நகை கடன் எண். --	செங்கல்பட்டு கிளை: CHENPPJ2511190005;	**சிங்கப்பெருமாள் கோயில் கிளை:** SPKVLPJ2511240003	
ஏலதேதி: 10.08.2026	**நேரம்: காலை11.00 மணி**	**ஏலம் நடைபெறும் இடம்:** எண்.98, மளிகை டவர், 2வது தளம், விளக்கு கோயில் தெரு, கீழ மண்டபம் சந்து மேக்ஸ் லைப் இன்சூரன்ஸ் மாடியில், காஞ்சிபுரம் - 631 501	**நகையை மீட்க கடைசி தேதி:** 08.08.2026
நகை கடன் எண். --	காஞ்சிபுரம் II கிளை: KCPR2RE2510270001		
ஏலதேதி: 10.08.2026	**நேரம்: மதியம் 2.00 மணி**	**ஏலம் நடைபெறும் இடம்:** 1வது & 2வது தளம், மனை எண்.2715, HIG பைபாஸ் ரோடு, திருவள்ளூர்-602001	**நகையை மீட்க கடைசி தேதி:** 08.08.2026
நகை கடன் எண். --	**அயப்பாக்கம் கிளை:** AYPKMPJ2511120001;	**மீஞ்சூர் கிளை:** MINJRPJ2509090002, MINJRPJ2509090003	
ஏலதேதி: 10.08.2026	**நேரம்: மதியம் 2.00 மணி**	**ஏலம் நடைபெறும் இடம்:** எண்.100, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மணவாள நகர், திருவள்ளூர் - 602 202	**நகையை மீட்க கடைசி தேதி:** 08.08.2026
நகை கடன் எண். --	**திருநின்றவூர் கிளை:** THNDRPJ2509060005		
ஏலதேதி: 10.08.2026	**நேரம்: மாலை 4.00 மணி**	**ஏலம் நடைபெறும் இடம்:** கொரெண்டே பில்டிங், 2வது தளம், எண்.5, L B ரோடு, அடையார், சென்னை - 600 020	**நகையை மீட்க கடைசி தேதி:** 08.08.2026
நகை கடன் எண். --	நெசப்பாக்கம் கிளை : NESAPPJ2409100001, NESAPPJ2503100002; **பெரும்சூர் கிளை:** PERUGPJ2510070004; **அண்ணாநகர் I கிளை:** ANNA1RE2511260003 **அரும்பாக்கம் கிளை:** ARUMKPJ2511010003; **கொளத்தூர் கிளை:** KOLTHPJ2511200001, **பெரும்பூர் கிளை:** PERMBRE2510170003, PERMBPJ2510110001, PERMBPJ2410100002, PERMBPJ2412040003, PERMBPJ2510100001,PERMBPJ2508190002; **வில்லிவாக்கம் கிளை:** VLVKMPJ2511050004; **அம்பத்தூர் கிளை:** AMBTRPJ2511290001,AMBTRPJ2511060001		

கடன் பெற்றவர் கடன் எண், பெயர், விளாசம், நகைகளின் விபரம், நகை ஈடு வைத்த கிளையின் அறிவிப்பு பலகையில் காணலாம். விளம்பர செலவு ரணியே வசூல் செய்யப்படும். முன் அறிவிப்பு இன்றி ஏலத்தை ரத்து செய்யவோ அல்லது ஏல தேதியை மாற்றி வைக்கவோ நிறுவனத்திற்கு உரிமை உண்டு. மேற்கண்ட நகைகளை அடகு வைத்தவர் மேற்கூறிய தேதி மாலை 3.00 மணிக்குள் அசல், வட்டி, ஏலச்செலவு, விளம்பரச்செலவுகளை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ரூ. 20,000 (ரூபாய் இருபதாயிரம்) கட்டியவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பான் கார்டு மற்றும் அட்ரஸ் ப்ரூப் கொடுக்க வேண்டும்.

தேதி: 28.07.2026
ஏலதாரர்
குருசாந்தி, சைதாப்பேட்டை, சென்னை

இப்படிக்கு
பொது மேலாளர் (நகைக்கடன்), அடையார், சென்னை-20

பொது அறிவிப்பு

ICICI Bank கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட்., 4/10, மைதிலி டவர், பெம்மனஹள்ளி ஒசூர் முதன்மைச் சாலை, பெங்களூரு - 560068.

கீழ்காணும் கடன்தாரர்/கள் ICICI வங்கியிடமிருந்து தாங்கள் பெற்ற கடன் வசதிகளுக்கான அனைவரும் வட்டியையும் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதால் அந்தக் கடன்கள் செயல்படாச் சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பு கடைசியாகத் தெரிந்த அவர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது சார்பு செய்யப்படாததால் இப்படிப் பொது அறிவிப்பு மூலமாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் (கடன் கணக்கு எண்) மற்றும் முகவரி	நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய கடனீட்டுச் சொத்தின் முகவரி	அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் / அறிவிப்பு நாளிட்ட நிலுவைத் தொகை	செயல்படாச் சொத்தாக (NPA) அறிவிக்கப்பட்ட நாள்
1.	ரியான்ஸ் கேபிட்டல் கோர்ப்., பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையாளர்: ஜேக்கப் பெரேரா M, எண் 675, அண்ணா நகர் மேற்கு விரிவு, கிழக்கு பிரதான சாலை, சென்னை - 600101 / 039505011298	அட்டவணை A சொத்து: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம். அமைவிடம் - பழைய கதவு எண் 443/1, புதிய கதவு எண் 70, மாதவரம் செங்குன்றம் நெடுஞ்சாலை, சர்வே எண் 1088/2 (1088/2B பட்டாப்படி) மற்றும் 1088/3, TS எண் 14 மற்றும் TS எண் 15, பிளாக் எண் 62, வார்டு C, மாதவரம் கிராமம். பரப்பளவு ஏறக்குறைய 2 ஏக்கர் 41.4 சென்ட் அல்லது 105153 சதுர அடி. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: TS எண் 2 மற்றும் TS எண் 13-இல் உள்ள பொது வழி, தெற்கு: சர்வே எண் 1088/4a-இல் உள்ள சொத்து மற்றும் சர்வே எண் 1088/4B (TS எண்கள் 20/1 & 16)-இல் உள்ள சந்து, கிழக்கு: கொடுங்கையூர் கிராமம், மேற்கு: மாதவரம்-செங்குன்றம் நெடுஞ்சாலை. TS எண் 13-இல் உள்ள பொது வழி, TS எண் 11-இல் உள்ள நிலம். இது வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதவரம் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. இனம் எண் 1: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம். அமைவிடம் - பழைய கதவு எண் 443/1, புதிய எண் 70, மாதவரம் செங்குன்றம் நெடுஞ்சாலை, சர்வே எண் 1088/2 (பழைய சர்வே எண் 1088/2B பட்டாப்படி), TS எண் 14, பிளாக் எண் 62, வார்டு C, மாதவரம் கிராமம். பரப்பளவு ஏறக்குறைய 1 ஏக்கர் 52.4 சென்ட் அல்லது 66385 சதுர அடி. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: TS எண் 2, தெற்கு: சர்வே எண் 1088/3, TS எண் 15 (மேற்படி உள்ள இனம் எண் 1-இல் குறிப்பிட்டுள்ள சொத்து) ஆகியவற்றில் உள்ள திருமதி M. ஜெயந்தி மற்றும் பிறருடைய சொத்து, கிழக்கு: கொடுங்கையூர் கிராமம், மேற்கு: மாதவரம் செங்குன்றம் சாலைக்குச் செல்லும் 30 அடி வழி (TS எண் 13) மற்றும் சர்வே எண் 1088/2 பாகம் (TS எண் 11)-இல் உள்ள சொத்து. இது வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதவரம் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. அட்டவணை B சொத்து (அடமானச் சொத்து) - மேற்படி அட்டவணை A சொத்தில் மேலும் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலத்தின் பரப்பளவு ஏறக்குறைய 9768.95 சதுர மீட்டர் அல்லது 105153 சதுர அடியில் அடங்கிய 0.51% பிரிவிடாப்பங்கு மற்றும் பாத்தியதை. அட்டவணை A சொத்தின் இனம் 1-இல் மேலும் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலத்தின் பரப்பளவு 38768 சதுர அடியில் அடங்கிய 0.51% பிரிவிடாப்பங்கு மற்றும் பாத்தியதை. அட்டவணை A சொத்தின் இனம் 2-இல் மேலும் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலத்தின் பரப்பளவு 66385 சதுர அடியில் அடங்கிய 0.51% பிரிவிடாப்பங்கு மற்றும் பாத்தியதை. இந்துடன் 6,ஆவது தளம், பிளாக் A-இல் உள்ள ஃபிளாட் எண் A-603, கட்டுமானப் பரப்பு 1480 சதுர அடி (பொதுப் பகுதிகளில் ஒரு பங்கு சேர்த்து) மற்றும் மூடப்பட்ட கார் நிறுத்தகத்தில் எண் S-5 கொண்ட நிறுத்துமிடம் மற்றும் திறந்தவெளிக் கார் நிறுத்தகத்தில் எண் OS-157 கொண்ட நிறுத்துமிடம் உட்பட அட்டவணை A சொத்தில் அமைந்துள்ள 'நவீன்ஸ் ஓயிட்பெர்ரி' என பெயரிடப்பட்ட கட்டட திட்டத்தில் அடங்கியது.	03.07.2026 ரூ. 14,67,012.00/-	01.05.2026
2.	டிவனடெட் இம்பெக்ஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையாளர்: நாராயணன் அன்பழகன், புதிய எண் 26 (பழைய எண் 8), சீனிவாச மூர்த்தி அவென்யு, LB சாலை, தரிசுநத்தம், சென்னை-600020 / 035005006301	(கடன் ஆவணத்தில் விவரித்துள்ளபடி / சொத்து ஆவணத்தில் அடங்கியபடி இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். மனை எண் 40, கதவு எண் 8, சீனிவாசமூர்த்தி அவென்யு, அடையாறு, சென்னை 600 020, TS எண் 25/6, பிளாக் எண் 40. அமைவிடம் - கோட்டூர் கிராமம், மயிலாப்பூர் - திருவல்லிக்கேணி வட்டம், தற்போது கிண்டி வட்டம், சென்னை மாவட்டம், சென்னை மாநகராட்சி பகுதி. நிலத்தின் பரப்பளவு ஏறக்குறைய 1004 சதுர அடி மற்றும் 558 சதுர அடி பரப்பளவு கொண்ட தளரற்றளம் மற்றும் 508 சதுர அடி பரப்பளவு கொண்ட முதல்தளத்துடன் கூடிய கட்டடம் உட்பட. இது தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கும் அடையாறு சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. உரிமையாளர்: நாராயணன் அன்பழகன். மேற்படி நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: குருமூர்த்தி அபர்களின் வீடு, தெற்கு: கதவு எண் 6 மற்றும் 5 அடி வழி, சீனிவாசமூர்த்தி அவென்யு, கிழக்கு: கதவு எண் 9, சீனிவாசமூர்த்தி அவென்யு, மேற்கு: கதவு எண் 5, சீனிவாசமூர்த்தி அவென்யு.	25.06.2026 ரூ. 85,66,793.00/-	04.05.2026
3.	கமீத் வென்ச்சர்ஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையாளர்: D ஸ்ரீ மீனாட்சி, எண் 4-வது தளம், பழைய எண் 150, புதிய எண் 220, பாரகா சாலை, வாதுமாள் கார்டன் 1-வது தெரு, கிழ்ப்பாக்கம், சென்னை-600010 / 027805004927	சொத்து 1: சர்வே எண் TS எண்-10/4, பிளாக்-95, வார்டு-D. ஆவணத்தின்படி மொத்த பரப்பளவு 4680 சதுர அடி. இதிலடங்கிய பிரிவிடாப்பங்கு 500 சதுர அடி. கதவு எண்-C62A, C62B, B6, ஃபிளாட் எண்-C-62A, C-62B, 2-வது தளம், அடித்தள கட்டுமானப் பரப்பு 990 சதுர அடி. மேல்கட்டுமானப் பரப்பு உட்பட. அமைவிடம் - திருமுல்லைவாயில் கிராமம், சென்னை தெற்குப் பதிவு மாவட்டம், "அம்பத்தூர் சார்பதிவு அலுவலக வட்டாரம். I) 2340 சதுர அடிக் கொண்ட நிலம் மற்றும் கட்டடத்திற்கான எல்லைகள் பின்வருமாறு (மனை எண்-C62A): வடக்கு: 30 அடி அகலமுள்ள முல்லை நெரு, தெற்கு: மனை எண்-C-62C, கிழக்கு: மனை எண்-C-62B, மேற்கு: 10 அடி வழிப்பாதை. அளவு விவரங்கள்: கிழக்கு மேற்காக வடக்கில் - 30 அடி, தெற்கு வடக்காகக் கிழக்கில் - 78 அடி, கிழக்கு மேற்காகத் தெற்கில் - 30 அடி, தெற்கு வடக்காக மேற்கில் - 78 அடி. மொத்த பரப்பளவு 2340 சதுர அடி. II) 2340 சதுர அடிக் கொண்ட நிலம் மற்றும் கட்டடத்திற்கான எல்லைகள் பின்வருமாறு [மனை எண்-C62B]: வடக்கு: 30 அடி அகலமுள்ள முல்லை நெரு, தெற்கு: மனை எண்-C-62C, கிழக்கு: மனை எண்-C-62A, மேற்கு: மனை எண்-C-61. அளவு விவரங்கள்: கிழக்கு மேற்காக வடக்கில் - 30 அடி, கிழக்கு மேற்காகத் தெற்கில் - 30 அடி, தெற்கு வடக்காகக் கிழக்கில் - 78 அடி, தெற்கு வடக்காக மேற்கில் - 78 அடி. மொத்த பரப்பளவு 2340 சதுர அடி. இத்துடன் அனைத்து புழக்க உரிமைகள் மற்றும் வழிப்பாதை உரிமைகள் சேர்த்து. சொத்து 2: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய காலி நிலம். மனை எண் 53, C.K. மாதவன் நகர், பரப்பளவு 2161-1/2 சதுர அடி, பழைய பட்டா எண் 255, 25.10.1993 நாளிட்ட M.M.D.A./P.P.D/L.O.எண் 119-இன்கீழ் ஒப்புதலெற்ற மற்றும் வழங்கப்பட்ட லே அவுட் வரைபத்தில் குறிக்கப்பட்டது, சர்வே எண்கள் 10/2B, 12/2, பிந்தைய பட்டா எண் 324-இன்படி புதிய சர்வே எண் 10/25 & 12/2A14, தற்போதைய பட்டா எண்கள் 2474 மற்றும் 2475-இன்படி சர்வே எண்கள் 10/25 மற்றும் 12/2A14. அமைவிடம் - செட்டியேரி கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். பரப்பளவு 2161-1/2 சதுர அடி. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: 30 அடிச் சாலை, தெற்கு: சர்வே எண் 11 மற்றும் 9-இல் உள்ள நிலம், கிழக்கு: மனை எண் 54, மேற்கு: மனை எண் 52. அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 33 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 33 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 66 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 65 அடி. இது வட சென்னை பதிவு மாவட்டத்துக்கும் சொக்குன்றம் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.	25.06.2026 ரூ. 51,47,813.89/-	02.05.2026

மாற்று வழிச் சேவை அறிவிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறிய கடன்தாரர்கள் மற்றும் / அல்லது அவர்தம் ஜாமீன்தார்கள் (ஒருவேளை இருந்தால்) இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவையைத் திரும்பச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறினால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாள்: 28.07.2026
இடம்: சென்னை

உண்மையுள்ள, அதிகாரப்பூர்வ அலுவலர்,
ICICI வங்கி லிட். சார்பில்

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதும